# கணிதச்சிறகுகள்

## வெளியீடு : 01

**தரம் 11 மாணவர்களின் கணித பாட அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கான வேலைத்திட்டம்**

**2020**

**வெளியீடு**
**கணிதப் பிரிவு**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**கிளிநொச்சி.**

**அனுசரணை : SJC 87 Initiative**

kalvi.lk

# எளிய வட்டி, கூட்டு வட்டி

01. மாதம் 5% வீத எளிய வட்டிக்கு ரூபா 5000 ஐக் கடனாகப் பெறும் ஒருவர் 4 மாதங்களின் பின்னர் முழுவதுமான கடனைத் திருப்பிச் செலுத்துகின்றனர் எனின் அவர் கொடுக்க வேண்டிய மொத்த பணம் எவ்வளவு?

02. 8% வீத ஆண்டு வட்டிக்கு ரூ 12000 ஐக் கடனாகப் பெற்ற ஒருவர் 2 வருடத்திற்கு செலுத்த வேண்டிய வட்டி எவ்வளவு?

03. ரூ 50000 இற்கு மூன்று வருட வட்டி ரூ 15000 எனின் வட்டி வீதம் யாது?

Education கல்வி

04. ரூ 25000 ஐ ஆண்டு வட்டி 15% இற்கு கடனாகப் பெற்ற ஒருவர் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் 36250 ரூ இனைச் செலுத்தி கடனில் இருந்து விடுபடுகின்றார் எனில் அவர் கடனைச் செலுத்தி முடிக்க எடுத்த காலத்தைக் காண்க.

05. 8% ஆண்டு கூட்டு வட்டிக்கு ரூ 10000 ஐக் கடனாகப் பெற்ற ஒருவர் 2 வருட முடிவில் கடனில் இருந்து விடுபட செலுத்த வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?



kalvi.lk

06. ஆண்டிற்கு 12% கூட்டு வட்டிக்கு ரூ 12000 ஐ வங்கியில் வைப்புச் செய்த ஒருவர் ஒரு வருட இறுதியில் பெறும் தொகை எவ்வளவு?

07. ஆண்டிற்கு 10% கூட்டு வட்டிக்கு ரூ 15000 ஐ கடனாகப் பெற்ற ஒருவர் 2 வருட இறுதியில் கடனில் இருந்து விடுபட செலுத்த வேண்டிய வட்டி எவ்வளவு?

08. ஆண்டுக்கு 8% எளிய வட்டி வழங்கும் வங்கியில் ரூ 2000 ஐ வைப்புச் செய்த நிமாலுக்கு ஓராண்டின் இறுதியில் கிடைக்கும் மொத்தப் பணம் எவ்வளவு?

Education கல்வி அධ්‍යාපන

09. மாதத்திற்கு 5% எளிய வட்டி வழங்கும் வங்கியில் ரூ 500 இனை வைப்புச் செய்த சமீர்க்கு ஓராண்டின் இறுதியில் உள்ள மொத்த பணம் எவ்வளவு?

10. கடனாக ரூ 1000 இற்கு மாதமொன்றிற்கு வட்டியாக ரூ 5 அறவிடப்படுகின்றது எனின் அறவிடும் வருட எளிய வட்டி வீதம் யாது?

11. 24% எளிய வட்டிப்படி ரூ 50000ஐ கடனாகப் பெற்ற ஒருவர் 2வருடம் 5 மாதத்தில் செலுத்தும் மொத்த வட்டி யாது?



kalvi.lk

01. சுமதி என்பவர் ரூ 100000 ஐ ஆண்டுக்கு 8% எளிய வட்டிக்குக் கடனாகப் பெற்றுக் கொள்கின்றார்.

1. சுமதி ஒரு வருடத்தில் செலுத்த வேண்டிய வட்டி யாது?
2. சுமதி இரண்டு வருடத்தில் கடனில் இருந்து விடுபடச் செலுத்த வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?
3. சுமதி ரூ 124000 ஐச் செலுத்தி கடனில் இருந்து விடுபடுகின்றார் எனின் அவர் விடுபட எடுத்த காலத்தை காண்க.
4. இதே கடன் தொகையை 2 வருடங்களில் மீளச் செலுத்தி கடனில் இருந்து விடுபடுகின்றார் எனின் அதற்கான வட்டி வீதம் யாது?

02. ரஜீவ் ரூ 50000 இன் 1/2 பங்கை வங்கியில் வைப்புச் செய்கின்றார். பின்னர் ரூ 10000 ஐ ரமேஸ்க்கு ஆண்டுக்கு 12% எளிய வட்டிக்கு கடனாகக் கொடுக்கின்றார்.

1. வங்கியில் வைப்புச் செய்த தொகை யாது?
2. வங்கி ஆண்டுக்கு 8% கூட்டு வட்டி வழங்குமெனின் இரண்டு வருட முடிவில் வைப்பிலுள்ள பணம் எவ்வளவு?
3. ரமேஸ் 2 வருடங்களின் இறுதியில் வட்டியுடன் மொத்தப் பணத்தையும் ரஜீவிடம் கையளிக்கின்றார் எனின்
   a. ரமேஸ் கொடுத்த மொத்தப் பணம் எவ்வளவு?
   b. இரண்டு வருட இறுதியில் ரஜீவ் இடம் உள்ள மொத்த பணத்தை காண்க.

03. சீலன் ஆண்டுக்கு 10% கூட்டுவட்டிக்கு ரூ 50000 ஐ 2 வருடங்களுக்கு கடனாகப் பெறுகின்றார்.

1. 2 வருட முடிவில் கடனை அடைப்பதற்கு செலுத்த தேவையான வட்டி எவ்வளவு?
2. கடனை அடைப்பதற்கு செலுத்த வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு? இதே கடனை 11% வருடாந்த எளிய வட்டிக்கு மாறன் பெற்றுக் கொள்கின்றான்.
3. 2 வருட முடிவில் மாறன் செலுத்த வேண்டிய வட்டி எவ்வளவு?
4. இருவரும் 2 வருட முடிவில் கடனில் இருந்து மீள்கின்றனர் எனின், குறித்த கடனை எவ்வட்டி முறையில் பெறுவது இலாபகரமானது? உமது விடைக்கான காரணம் யாது?

04. சுகுமார் வங்கி ஒன்றில் 50000 ஐ ஆண்டுக்கு 15% எளிய வட்டிக்கு கடனாகப் பெற்றார். அதே வங்கியில் சிவகுமார் ரூ 60000 ஐ ஆண்டுக்கு 12% எளிய வட்டிக்கு கடனாகப் பெற்றுக் கொள்கின்றார்.

1. ஒரு வருட முடிவில்.

    a. சுகுமார் செலுத்த வேண்டிய வட்டி யாது?

    b. சிவகுமார் செலுத்த வேண்டிய வட்டி யாது?

2. 2 வருட முடிவில் சிவகுமார் கடனில் இருந்து விடுபடுகின்றார் எனின் செலுத்த வேண்டிய மொத்த தொகை எவ்வளவு ?

3. சுகுமார் ரூ 65000 இனைச் செலுத்தி கடனில் இருந்து விடுபடுகின்றார் எனின் கடனில் இருந்து விடுபட எடுத்த காலத்தைக் காண்க.

05. குறித்த கடன் வழங்கும் நிறுவனம் ஒன்றில் திவ்யா ஆண்டுக்கு 10% எளிய வட்டிக்கும் சத்யா ஆண்டுக்கு 10% கூட்டுவட்டிக்கும் ரூ 150 000 ஐ இருவரும் கடனாகப் பெற்றுக் கொள்கின்றனர்.

1. ஒரு வருட முடிவில் இருவரும் செலுத்த வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?

2. இரண்டு வருட முடிவில் இருவரும் கடனில் இருந்து விடுபடுகின்றார். எனின் திவ்யா, சத்யா இருவரும் செலுத்த வேண்டிய வட்டிப் பணத்தை தனித் தனியே குறிப்பிடுக.

3. குறித்த கடன் வழங்கும் நிறுவனத்தில் 2 வருட முடிவில் அதிக தொகையை கையளித்து கடனில் இருந்து விடுபடுபவர் யார்?

4. இந் நிறுவனத்தில் நீர் கடன் பெற இருப்பின் எவ் வட்டி முறையில் கடன் பெற விரும்புவீர் ? உமது விடைக்கான காரணம் யாது?

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

Education கல்வி அධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page